TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

8069862

C

1. District : மாவட்டம் Tirunelveli PS காவல்நிலையம் Vigilance and Anti Corruption Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 06/2020 Date: நாள் 15.09.2020

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 Sections பிரிவுகள் 7 (a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 10.09.2020 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 16.30 hrs Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.09.2020 Time : நேரம் 09.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Manoor Taluk Office, Tirunelveli District. 21Km North West
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P.Anbu Herold (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr.Paranjothi
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 21.06.1993 (d) Nationality : நாட்டினம் INDIAN (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Cooli (g) Address முகவரி 2/58, Kovil Street, Moondradaipu Melur, Nanguneri Taluk.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr.Mariappan, Zonal Deputy Tahsildar, Manoor Taluk office, Tirunelveli District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 15.09.2020-ம் தேதி காலை 09.00 மணிக்கு நான் (D.ராபின் ஞானசிங், . காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருநெல்வேலி பிரிவு) நிலைய பொறுப்பில் இருக்கும் போது, திருநெல்வேி மாவட்டம், நாங்குநேரி தாலுகா, மூன்றடைப்பு மேலூரைச் சேர்ந்த திரு.P.அன்பு ஹெரால்டு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட மானூர் தாலுகா, மண்டல துணை வட்டாட்சியர் திரு.மாரியப்பன் என்பவர்களைப் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும், புகார் மனுவின் பேரில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரககாவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 15.09.2020-ம் தேதி 09.30 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.06/2020 u/s 7(a) of PC Act 1988 (as amended in) Act 16 of 2018 என வழக்குப்பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் அன்பு ஹெரால்டு, வயது 26/2020 த/பெ பரஞ்ஜோதி, 2/58, கோவில் தெரு, மூன்றடைப்பு மேலூர், நான்குனேரி தாலுகா, திருநெல்வேலி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, திருநெல்வேலி மாவட்டம். அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் என் அம்மா மற்றும் தம்பியுடன் குடியிருந்து வருகிறேன். என் தாத்தா எலிசா அவர்கள் பாட்டியுடன் மானூர் தாலுகாவிற்குட்பட்ட நாஞ்சான்குளம் கிராமத்தில் வசித்து வருகிறார்கள். என்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. AnbuHerald 15-09-2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
15/09/2020 at 10.00hrs.

Name: பெயர் D. Robin Gnanasingh
Rank: நிலை Inspector of Police ..........No. எண் ..........
VAC, Tirunelveli.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

தாத்தாவிற்கு சொந்தமாக பள்ளமடை என்ற இடத்தில் சர்வே எண் 809/4 ல் 19 சென்ட் நிலம் உள்ளது. அந்த இடத்திற்கு அவர் பெயரில் பட்டா கேட்டு விண்ணப்பிக்க வேண்டுமென்று என்னிடம் சொன்னார். அவருக்கு தற்போது சுமார் வயது 70-க்கு மேல் இருப்பதாலும் அவரால் அலைய முடியாது என்பதாலும் நான் அவரது பெயரில் கணினி பட்டா கேட்டு விண்ணப்பம் எழுதி அவரிடம் கையொப்பம் பெற்று திருநெல்வேலி கோட்டாட்சியரிடம் கொடுத்தேன். அங்கிருந்து மானூர் தாலுகா அலுவலகத்திற்கு வந்து அங்கிருந்து பல்லிக்கோட்டை கிராம நிர்வாக அலுவலருக்கு என் தாத்தா மனு வந்து, அவர் சுமார் 8 மாதங்களுக்கு முன்பு இடத்தை பார்க்க வந்தார். என்னையும் அழைத்ததின் பேரில் நானும் சென்றிருந்தேன். அவர் எனது தாத்தாவின் பத்திர நகல் மற்றும் ஆவணங்களை பார்வையிட்டு அன்றே சிபாரிசு செய்துவிட்டு என்னை மண்டல துணை வட்டாட்சியர், மானூர் அவர்களை போய் பார்க்க சொல்லிவிட்டார். நானும் மண்டல துணை வட்டாட்சியர், மானூர் அவர்களை போய் நேரில் சந்தித்தேன். அவர் என்னிடம் ஏதாவது ஒரு காரணம் சொல்லி கால தாமதம் செய்து கொண்டே இருந்தார். நான் பலமுறை மானூர் தாலுகா அலுவலகம் சென்று அங்கு மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரியும் திரு.மாரியப்பன் அவர்களை நேரில் சந்தித்து, கணினி பட்டா குறித்து கேட்ட போது, அவர் ஒவ்வொரு முறையும் ஏதாவது காரணம் சொல்லி என்னை அலைக்கழித்துக்கொண்டிருந்தார். கடைசியாக நான் 10.09.2020 அன்று அவரை அவரது அலுவலகத்தில் மாலை சுமார் 4.30 மணியளவில் சந்தித்த போது அவர் என்னிடம் ரூபாய் 20,000 பணம் தந்தால்தான் கணினியில் ஏற்றம் செய்து பட்டா தரமுடியும் என்று சொன்னார். நான் அவரிடம், என்னிடம் அவ்வளவு பணம் இல்லை நானே கூலி வேலை செய்து வருகிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் 5,000ரூ குறைத்துக்கொண்டு ரூபாய் 15,000 மாவது தந்தால்தான் பட்டா தரமுடியும் என்று சொல்லிவிட்டார். நான் வேறு வழியின்றி சரி என்று சொல்லிவிட்டு, 4 நாட்களில் பணம் ஏற்பாடு செய்துவிட்டு வருவதாக கூறிவிட்டு வந்துவிட்டேன். வீட்டிற்கு வந்து எனது தாத்தாவுடன் கலந்து பேசியதில் அரசு வேலையை செய்வதற்கு என்னிடம் லஞ்சமாக பணம் கேட்கிறாரே என்று எங்களுக்கு மனது சங்கடப்பட்டது. எங்களுக்கு லஞ்சமாக மண்டல துணை வட்டாட்சியருக்கு பணம் கொடுக்க விருப்பமில்லை. எனவே என் தாத்தாவிடம் இது சம்பந்தமாக லஞ்ச ஒழிப்புதுறையிடம் புகார் கொடுப்பதாகக்கூறி இன்று 15.09.2020-ம் தேதி இந்த புகார் மனு கொடுக்கிறேன். என்னிடம் லஞ்சம் கேட்கும் மானூர் மண்டல துணை வட்டாட்சியர் திரு.மாரியப்பன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஒம்.15.09.2020.

Sir, Received the complaint on 15.09.2020 at 09.00 hrs and conducted confidential enquiry and I registered a case in Tirunelveli V&AC Cr.No.06/2020 u/s 7(a) of Prevention of Corruption Act, 1988 (as amended in) Act 16 of 2018 on 15.09.2020 at 09.30 hrs. sd.D.Robin Gnanasingh, Inspector of Police, V&AC, Tirunelveli.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

15/9/2020
D. Robin Gnanasingh
Inspector of Police
V&AC, Tirunelveli